செய்திவெளியீடு எண்.17/2018 நாள் 09.03.2018

**குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை நுகர்வோர்கள் மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் செலுத்த குடிநீர் வாரியம் வேண்டுகோள்.**

-----

சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிற்கான குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியையும், குடிநீர் கட்டணங்களையும் நுகர்வோர்கள் வருகின்ற மார்ச் 31 ஆம் தேதிக்குள் செலுத்திடும்படி சென்னைக் குடிநீர் வாரியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிலுவைத் தொகையை செலுத்தத் தவறும் நுகர்வோர்களின் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளை துண்டிக்கவும் சென்னைக் குடிநீர் வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும் என நுகர்வோர்களுக்கு சென்னைக் குடிநீர் வாரியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

முறையான அறிவிப்புகளைக் கொடுத்தும் நீண்ட காலமாக நிலுவைத் தொகையினை செலுத்தத் தவறிய பல்வேறு வணிக வளாகங்கள் மற்றும் வீடுகளின் இணைப்புக்களை துண்டித்தும் வாரியம் ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நுகர்வோர்கள் தங்களுக்கான வரியையும், கட்டணங்களையும் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் அமைந்துள்ள குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலோ அல்லது அந்தந்தப் பகுதிகளில் உள்ள குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களிலோ அல்லது அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் வாரிய பணிமனை வசூல் மையங்களிலோ செலுத்தலாம். இணையதளத்தின் வாயிலாக செலுத்த விரும்புவோர் வாரியத்தின் வலைதள முகவரியான www.chennaimetrowater.tn.nic.in மூலமாக பற்று / வரவு வங்கி அட்டைகளை உபயோகப்படுத்தியும் கட்டணங்களை செலுத்தலாம்.

காலதாமதமாக செலுத்தப்படும் கட்டணங்களுக்கு அபராதமாக மேல்வரி மாதம் 1.25 சதவிகிதம் நுகர்வோர்கள் செலுத்த நேரிடும்.

சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேலும், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறாமல் இருந்தாலும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல் அவசியமாகும்.

எனவே, நுகர்வோர்கள் உரிய காலக் கெடுவுக்குள் கட்டணங்களையும், வரியையும் செலுத்தி ‘‘இணைப்பு துண்டிப்பு’’ போன்ற வாரியத்தின் நடவடிக்கைகளை தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்